# அலகு – 4

# TT0204 பயன்பாட்டு இலக்கணம்

## இந்த அலகு என்ன சொல்கிறது?

தமிழ் மொழியைப் பிழையின்றி எழுதவும், அன்றாட வாழ்வில் மொழியைப் பயன்படுத்தவும் வேண்டுமெனில் அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் கற்றிருக்க வேண்டும். அவ்வாறு கற்றால் தான் மொழியை முழுமையாகக் கற்றதற்குச் சமமாகும். தமிழ்மொழியை கற்பதில் ஏற்படும் சொற்பிழை, பொருள் பிழை, வாக்கிய பிழை, ஒற்றுப் பிழை, மரபுத்தொடர், மரபுசொற்கள் குறித்து இவ்வலகில் எடுத்துரைக்கப்படுகின்றன.

## இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- மரபுச்சொற்கள் மற்றும் மரபுத்தொடர்கள் பயன்பாட்டினை அறியலாம்.
- உவமை, இணைமொழி, பழமொழி ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.
- இக்கால இலக்கண மரபுகளை அறிந்து கொள்ளலாம்.
- வாக்கிய அமைப்பினை அறிந்துகொள்ளலாம்.
- பேச்சுத் தமிழுக்கும் எழுத்து தமிழுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம்.

## பாட அமைப்பு


| | |
|---|---|
| **4.0** | **பாட முன்னுரை** |
| **4.1** | **மரபுச் சொற்களும் மரபுத் தொடர்களும்** |
| 4.1.1 | மரபுச் சொற்கள் |
| 4.1.2 | தமிழில் பேச்சு வழக்கில் உள்ள மரபுத் தொடர்கள் |
| **4.2** | **மொழிவளத் தொடர்கள்** |
| 4.2.1 | மொழி வளத்தொடர் |
| 4.2.2 | இணைத்தொடர்கள் |
| 4.2.3 | உவமைத் தொடர்கள் |
| 4.2.4 | பழமொழிகள் |
| **4.3** | **ஒற்றுப் பிழை** |
| 4.3.1 | வல்லினம் மிகும் இடம், மிகா இடம் |
| 4.3.2 | எழுத்து நிலை |
| 4.3.3 | சந்தி நிலை |
| 4.3.4 | சொல்லிலக்கண நிலை |
| 4.3.5 | வினைத் திரிபு |
| 4.3.6 | சொல்வகைப்பாடு |
| 4.3.7 | தொடரிலக்கண நிலை |
| 4.3.8 | அல்ல என்னும் சொல்லாட்சி |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **4.4** | **வாக்கிய அமைப்புகள்** |
| 4.4.1 | வாக்கிய வகைகள் |
| 4.4.2 | அமைப்பு வகை வாக்கியங்கள் |
| 4.4.3 | வினை வகை வாக்கியங்கள் |
| 4.4.4 | ஒழுங்குபட எழுதுதல் |
| 4.4.5 | எழுவாய் பயனிலை |
| 4.4.6 | சொல் முடிபுகளறிதல் |
| 4.4.7 | எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைக் கண்டறியும் முறை |
| **4.5** | **மொழிப் பிழைகள்** |
| 4.5.1 | மொழியியல் வளர்ச்சி |
| 4.5.2 | பிழைகள் (எழுத்து, சொல், தொடர், சந்தி) |
| **4.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 4.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

வீட்டில் உள்ளவர்களும், நண்பர்களும், பொதுமக்களும் பேசும் மொழியை மனிதன் கற்றுக்கொள்கிறான். வீட்டில் உள்ளவர்களும், நண்பர்களும், பொதுமக்களும் மொழியைப் பிழையின்றிச் சரியாகப் பயன்படுத்தினால், மொழியில் பிழைகள் தோன்றா. வேற்றுமொழிப் பற்று, பொறுப்பின்மை, சோம்பல், தாய்மொழிப் பற்றின்மை முதலிய காரணங்களால் மொழியை மக்கள் பிழைபட பேசியும் எழுதியும் வருகின்றனர். எனவே, மொழியைப் பிழையின்றி எழுதவும், அன்றாட வாழ்வில் மொழிப் பயன்பாட்டை மேம்படுத்தவும் மாணவ ஆசிரியர்கள் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வலகில் பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும், ஒற்றுப்பிழை, தொடர் அமைப்பு ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கற்கும் மாணவ ஆசிரியர் மொழியைப் பிழையின்றி எழுதவும், பேசவும், கற்பிக்கவும் இயலும்.

## 4.1 மரபுச் சொற்களும் மரபுத் தொடர்களும்

### மரபுச் சொற்களும் மரபுத் தொடர்களும்

விலங்குகள், பறவைகள், பொருட்கள், தொழில்கள் முதலியவற்றைக் குறித்துக்காட்ட, தமிழர் வழிவழியாகப் பல சொற்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அச்சொற்கள் தமிழ் மொழியின் பண்பையும், தமிழரின் நாகரிகத்தையும் உணர்த்துகின்றன.

**எ.கா.**

- ஆண் குரங்கை கடுவன் எனவும், பெண் குரங்கை மந்தி எனவும் கூறுவது தமிழ் மரபாகும்.
- ஆண் குரங்கை Male Monkey எனவும், பெண் குரங்கை Female Monkey எனவும் கூறுவது ஆங்கில மரபாகும்.

சொல்வளம் மிக்க தமிழில் எண்ணற்ற மரபுச்சொற்களும் மரபுத் தொடர்களும் உள்ளன. ஒரு மொழியில் உள்ள மரபுத் தொடர்களை அப்படியே வேறொரு மொழியில் மொழி பெயர்ப்பது கடினம். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் அம்மரபுத்தொடரின் பொருள் மாறிவிடும். எனவே, ஒரு மொழியின் மரபுத்தன்மையை அறிந்து மொழி பெயர்க்க வேண்டும்.

எ.கா.

He Kicked the bucket – என்பதை, "அவன் வாளியை உதைத்தான்" என மொழிபெயர்த்தால், அது தவறான மொழி பெயர்ப்பு ஆகும். "அவன் இறந்துவிட்டான்" என்பதே இத்தொடர் உணர்த்தும் பொருளாகும். எனவே, மரபுச்சொல் / மரபுத்தொடர் என்பது, சொற்றொடர் வேறாகவும், அச்சொற்றொடர் உணர்த்தும் கருத்து வேறாகவும் இருக்கும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர், தாம் இயற்றிய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் 'மரபியல்' என்னும் ஓர் இயலையே உருவாக்கியுள்ளார். இதன் வாயிலாக, அவருடைய காலத்திற்கு முன் வாழ்ந்த மக்களும் தொன்றுதொட்டு மரபுச் சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தி வந்துள்ளனர் என அறியமுடிகிறது. எனவே, நம் முன்னோர்களால் தொன்றுதொட்டு வழங்கி வந்த தொடர்களை நாமும் பயன்படுத்துவதால், அவை மரபுத்தொடர் எனப்படுகின்றன.

சில மரபுச் சொற்களையும் தொடர்களையும் இங்குக் காண்போம்

### 4.1.1 மரபுச் சொற்கள்

#### 1. விலங்குகளின் இளமைப்பெயர்கள்

| வ. எண் | இளம் விலங்குகளைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | குட்டி | நாய்க்குட்டி, குதிரைக்குட்டி, ஆட்டுக்குட்டி, பன்றிக்குட்டி |
| 2 | கன்று | பசுக்கன்று, எருமைக்கன்று |
| 3 | பிள்ளை | அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை |
| 4 | குஞ்சு | எலிக்குஞ்சு, மீன் குஞ்சு |
| 5 | பறழ் | புலிப்பறழ் |
| 6 | குருளை | சிங்கக்குருளை |

#### 2. பறவைகளின் இளமைப்பெயர்கள்

| வ. எண் | இளம் பறவைகளைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | குஞ்சு | கோழிக்குஞ்சு, காக்கைக்குஞ்சு |
| 2 | பிள்ளை | கிளிப்பிள்ளை |

### 3. காய்களின் இளமைப் பெயர்கள்

| வ. எண் | காய்களின் இளமையைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | பிஞ்சு | அவரைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, வெள்ளரிப் பிஞ்சு |
| 2 | வடு | மாவடு |
| 3 | குரும்பை | தென்னங்குரும்பை, பனங்குரும்பை |
| 4 | கச்சல் | வாழைக்கச்சல் |

### 4. இலைகளைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

| வ. எண் | இலைகளைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | ஓலை | தென்னைஓலை, பனை ஓலை |
| 2 | சோகை | கரும்புச்சோகை |
| 3 | தட்டை | சோளத்தட்டை, கம்பந்தட்டை |
| 4 | கீரை | முருங்கைக்கீரை |

### 5. விலங்குகள் தங்கும் இடத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

| வ.எண் | விலங்குகள் தங்கும் இடம் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | கொட்டில் | குதிரைக்கொட்டில் |
| 2 | தொழுவம் | மாட்டுத்தொழுவம் |
| 3 | கூடம் | யானைக்கூடம் |
| 4 | குகை | சிங்கக்குகை |
| 4 | பட்டி | ஆட்டுப்பட்டி |

### 6. பறவைகள் தங்கும் இடத்தைக் குறிக்கும் மரபுச்சொற்கள்

| வ.எண் | பறவைகள் தங்கும் இடத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | பண்ணை | கோழிப்பண்ணை, வாத்துப்பண்ணை |
| 2 | பொந்து | கிளிப்பொந்து |
| 3 | கூடு | குருவிக்கூடு |

## 7. கூட்டத்தைக் குறிக்கும் மரபுச்சொற்கள்

| வ.எண் | கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | மந்தை | ஆட்டுமந்தை, மாட்டுமந்தை |
| 2 | குவியல் | கற்குவியல், நெற்குவியல் |
| 3 | கூட்டம் | மக்கள் கூட்டம், படைக்கூட்டம் |
| 4 | தோப்பு | புளியந்தோப்பு, மாந்தோப்பு, தென்னந்தோப்பு |
| 5 | தோட்டம் | வாழைத்தோட்டம், கரும்புத்தோட்டம் |

## 8. விலங்குகளின் ஒலி மரபுச் சொற்கள்

| வ.எண் | விலங்குகளின் ஒலி மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | எக்காளமிடுதல் | எருது எக்காளமிடும் |
| 2 | கத்துதல் | கழுதை கத்தும் |
| 3 | கனைத்தல் | குதிரைக் கனைக்கும் |
| 4 | முழங்குதல் | சிங்கம் முழங்கும் |
| 5 | ஊளையிடுதல் | நரி ஊளையிடும் |
| 6 | குரைத்தல் | நாய் குரைக்கும் |
| 7 | உறுமுதல் | புலி உறுமும் |
| 8 | பிளிறுதல் | யானை பிளிறும் |
| 9 | சீறுதல் | பாம்பு சீறும் |

## 9. பறவைகளின் ஒலி மரபுச் சொற்கள்

| வ.எண் | பறவைகளின் ஒலி மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | அலறுதல் | ஆந்தை அலறும் |
| 2 | கத்துதல் | காகம் கரையும் |
| 3 | பேசுதல் | கிளி பேசும் |
| 4 | கூவுதல் | குயில் கூவும் |
| 5 | குழறுதல் | கூகை குழறும் |
| 6 | கொக்கரித்தல் | கோழி கொக்கரிக்கும் |
| 7 | அகவுதல் | மயில் அகவும் |
| 8 | முரலுதல் | வண்டு முரலும் |

### 10. செயல் அல்லது வினை மரபுச் சொற்கள்

| வ.எண் | செயல் அல்லது வினை மரபுச் சொற்கள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | உண்ணல் | உணவு உண்டான் |
| 2 | தின்னல் | முறுக்குத் தின்றான் |
| 3 | பருகல் | பால் பருகினான் |
| 4 | நக்கல் | தேனை நக்கினான் |
| 5 | குடித்தல் | நீர் குடித்தான் |
| 6 | அருந்துதல் | தேநீர் அருந்தினான் |
| 7 | வரைதல் | ஓவியம் வரைந்தான் |
| 8 | தீட்டுதல் | வண்ணம் தீட்டினான் |
| 9 | இயற்றுதல் | செய்யுள் இயற்றினான் |
| 10 | பாடுதல் | பாடல் பாடினான் |
| 11 | வனைதல் | குடம் வனைந்தான் |
| 12 | முடைதல் | கூடை முடைந்தான் |
| 13 | வேய்தல் | கூரை வேய்ந்தான் |
| 14 | பின்னுதல் | பாய் பின்னுதல் |
| 15 | எழுப்புதல் | சுவர் எழுப்பினார் |
| 16 | நெய்தல் | ஆடை நெய்தார் |
| 17 | உழுதல் | நிலத்தை உழுதார் |
| 18 | வெட்டுதல் | கிணறு வெட்டினார் |
| 19 | விழுங்குதல் | மாத்திரை விழுங்கினார் |
| 20 | அணிதல் | ஆடை அணிந்தார் |

### 4.1.2 தமிழில் பேச்சு வழக்கில் உள்ள மரபுத் தொடர்கள்

| மரபுத்தொடர் | விளக்கம் |
|---|---|
| அவசரக் குடுக்கை | சிந்திக்காமல் செயல் செய்தல் |
| ஆயிரங்காலத்துப் பயிர் | நீண்டநாள் வாழ்தல் |
| உலை வைத்தல் | கெடுதல் செய்தல் |
| எடுப்பார் கைப்பிள்ளை | யார் எதைச்சொன்னாலும் செய்தல் |
| ஏட்டுச் சுரைக்காய் | நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகள் |
| ஓலை கிழிந்தது | வேலை போய்விட்டது |
| கயிறு திரிக்கிறான் | பொய் பேசுகிறான் |
| மலையேறி விட்டது | காலம் மாற்றம் அடைந்துவிட்டது |

| மரபுத்தொடர் | விளக்கம் |
|---|---|
| முதலைக்கண்ணீர் | பொய்யான அழுகை |
| கொடி கட்டிப் பறந்தான் | பெருமையாக வாழ்ந்தான் |
| கோட்டை விட்டான் | ஏமாற்றம் அடைந்தான் |
| முட்டுக்கட்டை | தடையாக இருத்தல் |
| குதிரைக்கொம்பு | கிடைத்தற்கரியது |
| தலையாட்டி பொம்மை | எதற்கும் இணங்கி நடப்பது |

## 4.2 மொழிவளத் தொடர்கள்

### மொழிவளத் தொடர்கள்

### 4.2.1 மொழி வளத்தொடர்

கருத்தையும், உணர்வையும், கற்பனையையும் வெளியிடும் கருவி மொழி. இக்கருவி எதிர்காலத்தவருக்கும் பயன்படுமாறு இன்றைக்குப் பயன்படுத்துபவரால் வளப்படுத்தப்படுகிறது. இலக்கியங்கள் அவ்வளத்தினைப் பொதிந்துள்ள மொழிப் பெட்டகமாகத் திகழ்கிறது. அதனால் தான் மொழியைக் கற்பதற்கு இலக்கியங்களை வளமூலமாகக் கொள்கிறோம். வளமூலத்தில் இருந்து பெற்ற மொழிக் கூறுகள் அறிதல் என்னும் நிலையிலே நின்று விடாமல் பயன்பாட்டிற்கும் கொண்டு வரும்போது ஒருவருடைய மொழித்திறன், வளமும் பொலிவும் பெறுகிறது.

### 4.2.2 இணைத்தொடர்கள்

**இணைத்தொடர்கள்** என்பது தமிழ்மொழியில் இணையிணையாக அமையும் சில சொற்களைக் குறிக்கும். இணைச்சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தினால் மொழிநடை சிறக்கும்; சொல்லப்படும் கருத்தும் திருத்தமாய் விளங்கும். நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது சுவைபடக் கூறுவதற்காக ஒரே பொருள் தரும் இரு சொற்களை இணைத்துப் பயன்படுத்துவது இணைச்சொற்கள் எனப்படும்.

இணைச்சொற்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை :

1. நேரிணைச் சொற்கள்

2. எதிரிணைச் சொற்கள்
3. செறியிணைச் சொற்கள்

- **நேரிணைச் சொற்கள்**

ஒரே பொருள் தரும் இரு சொற்கள் இணைந்து வருவது நேரிணைச் சொற்கள் எனப்படும். அவை பின்வருமாறு அமையும்.

- சீரும் சிறப்பும்
- பேரும் புகழும்
- ஈடு இணை
- உற்றார் உறவினர்
- நோய் நொடி
- குற்றங் குறை
- கூன் குருடு
- முக்கலும் முனங்கலும்

- **எதிரிணைச் சொற்கள்**

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு சொற்கள் இணைந்து வருவது எதிரிணைச் சொற்கள் எனப்படும். அவை பின்வருமாறு அமையும்.

- அல்லும் பகலும்
- உயர்வு தாழ்வு
- அடியும் நுனியும்
- உள்ளும் புறமும்
- குறுக்கும் நெடுக்கும்
- உச்சிமுதல் உள்ளங்கால் வரை
- ஐயந்திரிபற
- இருளும் ஒளியும்
- கிழக்கும் மேற்கும்
- வடக்கும் தெற்கும்

- **செறியிணைச் சொற்கள்**

ஒரு சொல்லின் பண்பு அல்லது செயலை வலுவூட்டும் விதமாக ஒத்த பொருளுடைய இரு சொற்கள் இணைந்து வருவது செறியிணைச் சொற்கள் எனப்படும். அச்சொற்கள் பின்வரும் இரு வழிகளில் அமையும்.

**பண்பு செறியிணைச் சொற்கள்**

- செக்கச் செவேல்
- வெள்ளை வெளேர்
- பச்சைப் பசேல்
- நட்ட நடுவில்

### செயல் செறியிணைச் சொற்கள்

- அழுதழுது
- நடந்து நடந்து
- கொஞ்சிக் கொஞ்சி
- பார்த்துப் பார்த்து

### 4.2.3 உவமைத் தொடர்கள்

நன்கு தெரிந்த ஒரு பொருளின் இயல்பை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவது உவமையணி. அத்தகைய உவமையை உள்ளடக்கிய தொடரே உவமைத் தொடர் ஆகும். இவ்வுவமைத் தொடர்கள் வாக்கியங்களில் அழகும், கருத்துகளை ஆணித்தரமாக விளக்குவதற்கும் உதவுகின்றன.

- அடியற்ற மரம்போல
- ஆலைவாய்க் கரும்பு போல
- இடியோசை கேட்ட நாகம் போல
- இலவு காத்த கிளியென
- உடுக்கை இழந்தவன் கைபோல
- உடும்பு பிடிபோல
- உப்பிருந்த பாண்டம் போல
- உமிக்குற்றிக் கை சலித்தாற் போல
- ஒருதாய் வயிற்று மக்களைப் போல
- காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தாற்போல

### 4.2.4 பழமொழிகள்

ஏதேனும் ஒரு சமூகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரக்கூடிய (அல்லது பயன்படுத்தக் கூடிய) ஆழ்ந்த அறிவினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் கூறும் பழமையான மொழி **பழமொழி** எனலாம். அவை கீழ்க்கண்டவாறு அமையும்.

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

- அளவுக்கு விஞ்சினால் அமுதமும் நஞ்சு
- ஆனைக்கும் அடி சறுக்குமன்றோ ?
- ஆனைக்கு ஒரு காலம் பூனைக் கொரு காலம்
- இஞ்சி லாபம் மஞ்சளில்
- இளங்கன்று பயமறியாது
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை
- உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?
- ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
- எருது நோய் – காக்கைக்குத் தெரியாது ?

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. விலங்குகளின் இளமைப் பெயர்கள் ஐந்தினை எழுதுக. |
| 2. இலைகளின் மரபுச்சொற்கள் நான்கினை எழுதுக. |
| 3. பறவைகளின் ஒலி மரபுச் சொற்கள் ஐந்தினை எழுதுக. |
| 4. இணைச்சொற்களின் வகைகள் யாவை? |
| 5. உவமைத்தொடர் என்றால் என்ன? |
| 6. பழமொழி என்றால் என்ன? சில எடுத்துக்காட்டுகள் தருக. |

## 4.3 ஒற்றுப் பிழை

### ஒற்றுப் பிழை

தமிழில் எழுதும்போது ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, கருத்துப்பிழை, பிறமொழிக் கலப்புப் பிழை, குறியீட்டுப் பிழை, புணர்ச்சி, மரபு, யாப்பு எனப் பல வகைகளில் பிழை ஏற்படுகிறது. அவற்றில் ஒற்றுப்பிழை குறித்து இப்பகுதியில் காணலாம்.

### 4.3.1 வல்லினம் மிகும் இடம், மிகா இடம்

தமிழில் எழுதும்போது ஒற்றுப்பிழைக்குக் காரணமாக அமைவது, வல்லின மெய்யாகிய க், ச், த், ப் என்னும் எழுத்துகள் ஆகும். இந்நான்கு வல்லினமெய் எங்கு இடம்பெற வேண்டும், எங்கு இடம்பெறக் கூடாது என்பதைக் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும். படித்தவர்களாக இருந்தாலும் படிக்காதவர்களாக இருந்தாலும் இந்த வல்லினமெய்களை உரிய இடங்களில் பயன்படுத்துவதில் தடுமாற்றம் இருக்கத்தான் செய்கிறது. இவ்வல்லின மெய்கள் எங்கு மிகும்? எங்கு மிகாது? என்பதைப் புரிந்துகொண்டால் ஓரளவாவது பிழையைத் தவிர்க்கலாம்.

- **வல்லினம் மிகுமிடம்**

1. அக்குதிரை, இக்கதவு, உப்பக்கம் (சுட்டெழுத்தின் பின்)
2. அந்தக்காலம், இந்தப் பொருள், எந்தச் சொல் (சுட்டு, வினாச் சொற்களின் பின்)
3. அங்குச் சென்றான், இங்குப் பார்த்தான், எங்குக் கண்டாய்? (இடப்பொருளின் பின்)
4. அப்படிச் செய்தான், இப்படிச் சொல், எப்படிப் பேசினான்?
5. அவ்வகைச் செடி, இவ்வகைப் பூக்கள், எவ்வகைத் துணி?
6. இனிக் காண்போம், தனிச்சொல் (இனி, தனி)
7. தடையின்றிச் செல், அந்த மாணவனன்றிப் பிற மாணவர் பேசக்கூடாது. (அன்றி, இன்றி)
8. எனச் சொன்னான், மிகச்சிறிய செடி, நடுக்கடல், பொதுக்கூட்டம் (என, மிக, நடு, பொது)
9. முழுப்பக்கம், திருக்குளம், புதுக்கண்ணாடி, அரைப்பங்கு, பாதிக் கிணறு (முழு, திரு, புது, அரை, பாதி)
10. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு (எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்ச் சொற்களின் பின்)
11. தீச்செயல், கைக்குழந்தை, பூப்பந்தல், நாக்குழறியது (ஓரெழுத்து ஒருமொழிச் சொற்களின் பின்)
12. பாடாத் தேனீ, காணாக் காட்சி, தீராத் துன்பம் (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்)
13. தச்சுத் தொழில், உப்புக்கடை, கேட்டுக்கொள், தத்துக்கொடுத்தான், கற்றுக்கொடு, விறகுக்கட்டை (வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களின் பின்)
14. வரச்சொன்னாள், தேடப்போனார், மெல்லப் பேசினான் (அகர ஈற்று வினையெச்சம்)
15. ஓடிப்போனான், பேசிப்பார்த்தார், சூடிக்கொண்டாள் (இகர ஈற்று வினையெச்சம்)
16. ஒழுங்காய்ப் படி, மகிழ்ச்சியாய்ப் பேசினாள், போய்த் தேடு (ஆய், போய்)
17. கதிரவனைப் பார்த்தேன், தொழிலைச் செய்தார், செய்யுளைப் படித்தேன் (இரண்டாம் வேற்றுமை உருபு'ஐ' வெளிப்படையாக வரும்போது)
18. வீட்டுக்குப் போ, அவனுக்குத் தெரியும், நாட்டுக்குத் தொண்டு செய் (நான்காம் வேற்றுமை உருபு, 'கு' வெளிப்டையாக வரும்போது)
19. புலித்தோல், பூனைக்கால், கங்கைக்கரை (ஆறாம் வேற்றுமைத்தொகை)
20. எலிப்பாட்டு (எலியைப் பற்றிய பாட்டு) (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)

21. வெள்ளிக் கிண்ணம் (வெள்ளியால் செய்த கிண்ணம்) (மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)
22. உரிமைப் போராட்டம் (உரிமைக்கு நடத்தும் போராட்டம்) (நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)
23. தேங்காய்ப்பால் (தேங்காயிலிருந்து பிழியப்படும் பால்) (ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)
24. சென்னைப் பல்கலைக்கழகம் (சென்னையின்கண் உள்ள பல்கலைக்கழகம்) (ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)
25. அன்பாகப் பேசினார், சிறப்பாகத் தொடங்கப்பட்டது, மெதுவாகச் சிரித்தாள், கனிவாகக் கூறினார். (ஆக என்னும் சொல்லுருபின் பின்)
26. வேர்ப்பலா, வாழ்க்கை, பாய்ச்சல், வாழ்த்தினாள் (ய, ர, ழ ஒற்றுக்குப் பின் )
27. கிழக்குப் பக்கம், மேற்குத் தொடர்ச்சி மலை (திசைப் பெயர்களின் பின
28. நண்டுக் கூட்டம், பங்குச் சந்தை (சில மென்றொடர்க் குற்றியலுகரம் பின்)
29. மரபுக்கவிதை, அரசுப்பள்ளி, உழவுத்தொழில் (சில உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் பின்)
30. சிவப்புப் புடவை, முல்லைக்காடு, முத்துப்பற்கள் (தொகைநிலைத் தொடர்கள்)
31. சாலப் பேசினார், தடக்கை (உரிச்சொற்களின் பின்)
32. நிலாப்பாட்டு, பலாப்பழம் (தனிக்குற்றெழுத்துக்குப் பின்வரும் ஆகாரச்சொல்)
33. வாழ்க்கைப் படகு, கண்ணீர்ப் பூக்கள் (உருவகங்கள்)
34. மெல்லப் பேசு, உரக்கச் சொல், நிரம்பக் கொடுத்தார், நிறையக் கற்றான் (மெல்ல, உரக்க, நிரம்ப, நிறைய)
35. எல்லாக் குழந்தைகளும் ஒன்றுகூடின, அனைத்துப் பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை (எல்லா, அனைத்து)
36. நாட்டுப்பற்று, ஆற்றுப் பெருக்கு, வயிற்றுப் பசி (ஒற்று இரட்டிக்கும் குற்றியலுகரங்கள்)
37. அறிவுக் கல்லூரி, பொதுப் பார்வை, கணுக்கால் (முற்றியலுகரம்)
38. சின்னக்குடை, சின்னப்பெண், சின்னத்தட்டு (சின்ன என்னும் பெயரடையின் பின்)
39. கத்தியைவிடக் கூர்மை, கூடக்கொஞ்சம் கொடு (விட, கூட)
40. கீழ்க்காணும் செய்திகள், புலிகளிடைப் பசு போல (கீழ், இடை)

- **வல்லினம் மிகா இடம்**

1. அது காண், இது செய், அவை சிறந்தவை, இவை கடினமானவை (சுட்டுப்பெயர்கள்)
2. எது கண்டாய்? யாது செய்தாய்? எவை தவறு? யாவை போயின? (வினாப்பெயர்கள்)
3. மலர் பூத்தது, குதிரை கனைத்தது, கிளி கொஞ்சியது (முதல் வேற்றுமை)
4. என்னொடு கற்றவர், தாயோடு சென்றான் (மூன்றாம் வேற்றுமை விரி)
5. எனது கை, எனது பல் (ஆறாம் வேற்றுமை விரி)
6. அண்ணா கேள், கனவே கலையாதே, மகனே பார் (விளி வேற்றுமை)
7. ஓடிய குதிரை, படித்த பெண், வென்ற தமிழன் (பெயரெச்சம்)
8. நாடு கடத்தினான், மோர் குடித்தான், புளி கரைத்தாள் (இரண்டாம் வேற்றுமைத்தொகை)
9. தரும்படி கேட்டான், எழுதும்படி சொன்னாள் (படி என முடியும் வினையெச்சம்)
10. பறந்தன பறவைகள், நடந்தன கால்கள் (அகர ஈற்று வினைமுற்று)
11. வாழ்க தலைவர், வாழ்க தமிழகம், வீழ்க பகைவன் (வியங்கோள் வினைமுற்று)
12. குடிதண்ணீர், குளிர்காலம், திருநிறை செல்வி, திருநிறை செல்வன் (வினைத்தொகை)
13. அத்தனை புத்தகங்களா?, இத்தனை துணிகளா? எத்தனை பேர்கள்? (அத்தனை, இத்தனை, எத்தனை)
14. அவ்வளவு கண்டேன், இவ்வளவு தந்தாள், எவ்வளவு கொடுத்தாய்? (அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு)
15. அவனா கண்டான்? இவளா செய்தாள்? அவனே பார்த்தான், கண்ணனோ தடுத்தான்? (ஆ, ஏ, ஓ வினாப்பெயர்கள்)
16. ஒன்று கூடுவோம், மூன்று கனி, ஐந்து பழம், ஏழு கடல் (எட்டு, பத்து தவிர மற்ற எண்ணுப்பெயர்களின் பின்)
17. வள்ளுவர் கோட்டம், கண்ணகி கோவில், ஜானகி மகன் (நான்காம் வேற்றுமைத் தொகை)
18. தாய் தந்தை, செடி கொடி, வெற்றிலை பாக்கு (உம்மைத் தொகை)
19. அன்று கேட்டார், இன்று சொன்னார், என்று தருவார்? (அன்று, இன்று, என்று)
20. அவ்வாறு கேட்டார், இவ்வாறு கூறினார், எவ்வாறு பேசினார்? (அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு)

21. அத்தகைய திறமை, இத்தகைய தன்மை எத்தகைய செயல்? (அத்தகைய, இத்தகைய, எத்தகைய)
22. கை தட்டினான் (மூன்றாம் வேற்றுமைத் தொகை)
23. பள்ளி சென்றாள் (நான்காம் வேற்றுமைத் தொகை)
24. வரை பாய்ந்தான் (வரை – மலை) (வரையிலிருந்து பாய்ந்தான்) (ஐந்தாம் வேற்றுமைத் தொகை)
25. வீடு தங்கினான் (ஏழாம் வேற்றுமைத் தொகை)
26. தோழி கூற்று, ஆசிரியர் கல்வி, மாணவர் கையேடு (உயர்திணைப் பெயருக்குப் பின்)
27. குழந்தைக்கான கல்வி, பிறகு பார்ப்போம், உரிய பங்கு, தகுந்த கூலி, ஏற்ற பணி, முன்பு கண்டேன், யாருடைய செயல்? (ஆன, பிறகு, உரிய, தகுந்த, ஏற்ற, முன்பு, உடைய)
28. பார்க்காத பயிர், செல்லாத காசு (எதிர்மறைப் பெயரெச்சம்)
29. சிறிய கண்ணாடி, பெரிய பானை (சிறிய, பெரிய)
30. கண்டு களித்தான், வந்து போனான், செய்து பார்த்தான், அழுது தீர்த்தான் (சில குற்றியலுகரங்கள்)
31. பாம்பு பாம்பு, தா தா தா, பார் பார் பார்/ கலகல, படபட, சலசல (அடுக்குத்தொடர்/ இரட்டைக் கிளவி)
32. எழுத்துகள், கருத்துகள், நாள்கள் (கள் விகுதி)
33. ஆதிபகவன், தேச பக்தி, பந்த பாசம் (வடசொற்கள்)
34. நல்ல பையன், தீய பழக்கம், அரிய காட்சி (நல்ல, தீய, அரிய)
35. தம்பி பார்த்தான், தங்கை கூப்பிட்டாள், அம்மா பசிக்கிறது (உறவுப்பெயர்களின் பின்)

### 4.3.2 எழுத்து நிலை

நாம் இன்று பல்வேறு மொழி பேசும் மக்களுடன், பல்வேறு நாட்டினருடனும், பண்பாட்டாளர்களுடனும் நெருங்கி உறவாடுகின்றோம். பிற நாட்டு மக்களின் பெயரையும், மொழியின் பெயரையும், நாட்டின் பெயர்களையும் எழுதும்போது ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ முதலிய எழுத்துகளைத் தவிர்க்க இயலாத வகையில் பயன்படுத்துகிறோம். ஆனால், தமிழ் இலக்கணங்கள் இந்த எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்த எழுத்துகள் தவிர்க்க இயலாத நிலையில் ஆளப்பெற்று வருகின்றன.

முற்காலத் தமிழுக்கு ஏற்ப தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண நூல்கள் எழுதப்பட்டதைப் போன்று, இக்காலத் தமிழுக்கும், புதிய இலக்கண நூல் எழுத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ ஆகிய

எழுத்துகளுக்குத் தமிழ் இலக்கணத்தில் இடம் தந்தால், மெய்ம்மயக்கங்கள், மொழி இறுதி நிலை, மொழிதல் நிலை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றங்களும் ஏற்படும்.

### 4.3.3 சந்தி நிலை

செய்தித்தாள்களிலும், மாத இதழ்களிலும், வார இதழ்களிலும் உள்ள கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைப் படிக்கும்பொழுது, சந்தி இலக்கணத்தில் குழப்பநிலை இருப்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். எனவே, இக்காலத் தமிழுக்கேற்ற சந்தி இலக்கணத்தை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது.

பழங்காலத் தமிழுக்குரிய சந்தி இலக்கணத்தை நாம் இன்றைக்கு வற்புறுத்தி புகுத்த முடியாது. எனவே, வழக்கிழந்து போன பழைய சந்தி விதிகளை நாம் விலக்க வேண்டியுள்ளது.

பஃறாழிசை, சிஃறாழிசை, கஃறீது, முஃடீது முதலிய சொற்களில் உள்ள சந்தி விதிகள் இக்காலத்தில் பயன்படுவதில்லை. எனவே, தவிர்க்க இயலாதனவாகவும் தெளிவாக உணர்ந்து கொள்ளத்தக்கனவாகவும் உள்ள புதுச்சந்தி விதிகளை முறைப்படுத்திப் பயன்படுத்த வேண்டும்.

'மக்கள் தொகை' என்னும் தொடர் இலக்கண விதியின்படி 'மக்கட்டொகை' என ஆகவேண்டும். ஆனால் இன்றைய தமிழில் இப்படிப்பட்ட சந்தி விதியைப் பயன்படுத்துவதால் இடர்ப்பாடு இருக்கிறது. இதனால் 'மக்கள் சிலர்' என எழுவதைப் பார்க்க முடிகிறது. 'மக்கட்தொகை' என எழுதினாலும் டகர, தகர மயக்கம் (மக்கட்தொகை) தோன்றும். இத்தகைய மெய்மயக்கம் தமிழ்மொழியில் இல்லை. இப்படிப்பட்ட சூழலில் 'மக்கள் தொகை' என்பதை எவ்வித சந்தியும் இல்லாமலே எழுத வாய்ப்பு அளிக்கவேண்டும்.

'அறிவியல் தமிழ்' என்னும் தொடரும் இலக்கண விதியின்படி 'அறிவியற்றமிழ்' என ஆகவேண்டும். ஆனால், இது இன்றைய தமிழில் 'அறிவியல் தமிழ்' என்றே நிலைபெற்று விட்டன. இவற்றை இன்றைய வழக்கிற்கேற்ப நோக்காமல், பழைய சந்தி விகுதிகளைப் பொருத்தி மக்கட்டொகை எனவும் அறிவியற்றமிழ் எனவும் சொல்லுவது பொருத்தமற்றதாகும்.

### 4.3.4 சொல்லிலக்கண நிலை

பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாகும்.

**எ.கா.**

அவன் இங்கு வந்தான் (ஆண்பால்)
அவள் இங்கு வந்தாள் (பெண்பால்)
அவர் இங்கு வந்தார் (பலர்பால்)
அது இங்கு வந்தது (ஒன்றன்பால்)
அவை இங்கு வந்தன (பலவின்பால்)

இத்தகைய பால்பகுப்பு முறை தொல்காப்பியம் முதலான பழைய இலக்கணங்கள் கூறுகின்றன.

இங்கே உள்ள எடுத்துக்காட்டுகளில் 'அவர்' என்னும் பழங்காலத்தில் பன்மைப் பொருளை உணர்த்தியது. இக்காலத் தமிழில் இச்சொல் (அவர்) பன்மைப் பொருளை உணர்த்தப் பயன்படுத்துவதில்லை. 'அவர்கள்' என்னும் புதிய சொல்லைப் பன்மைப் பொருளை உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது. 'அவர்கள்' என்னும் இச்சொல் பழந்தமிழில் இல்லை. இக்காலத் தமிழில் 'அவர்' என்னும் சொல் உயர்திணை ஒருமையை உணர்த்துவதற்கே பயன்படுத்தப்படுகிறது. இக்காலத்தில் இதனை 'உயர்பால்' எனக் கூறுகின்றனர். எனவே, ஏற்கெனவே உள்ள ஐம்பாலுடன் இதனைச் சேர்க்க, பாலின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளமையை அறியமுடிகிறது.

### 4.3.5 வினைத் திரிபு

இக்கால இலக்கணத்தில் துணை வினைகளின் பயன்பாட்டு அடிப்படையில் வினைத் திரிபுகள் பெருகி வளர்ந்துள்ளன. இரு, விடு, தொலை முதலான துணை வினைகள், செய் என்னும் வினையெச்சத்தோடு சேர்ந்து வந்து இருந்தான், வந்துவிட்டான், வந்து தொலைந்தான் என்பன போன்ற வினைத் திரிபுகளை உருவாக்குகின்றன. இப்படிப்பட்ட வினைக் கிளவிகள் 'வினைக் கூறுபாட்டுக் கிளவிகள்' எனக் குறிக்கப்படுகின்றன.

போ, பார், வேண்டு முதலான துணை வினைகள் செயவென் எச்சத்தோடு சேர்ந்து வரப்போகிறது, ஓடப்பார்த்தான், பாடவேண்டும் முதலான கிளவிகளை உருவாக்குகின்றன. இத்தகைய வினைக் கிளவிகளை 'வினைநோக்குக் கிளவிகள்' என்கின்றனர்.

குறிப்பிட்ட துணைவினைகள் மட்டுமே வினைக் கூறுபாட்டுத் துணை வினைகளாகவும், வினைநோக்குத் துணைவினைகளாகவும் பயன்படுகின்றன.

### 4.3.6 சொல்வகைப்பாடு

நமது மரபிலக்ககணங்கள் தமிழிலுள்ள சொற்களை நான்காக வகைப்படுத்தியிருக்கின்றன. அவை பெயர், வினை, இடை, உரி என்பனவாகும். இன்றைய நிலையில் அந்த நான்கிலேயே நாம் எல்லாச் சொற்களையும் அடக்கிவிட முடியுமென்று தோன்றவில்லை. இக்காலத் தமிழுக்கு ஏற்ற வகையில் நாம் புதிய முறையில் சொல் வகைப்பாட்டை அமைக்க வேண்டியிருக்கிறது.

### 4.3.7 தொடரிலக்கண நிலை

மரபிலக்கணத்தில் தொடரிலக்கணம் தொடர்பான செய்திகள் உள்ளன. ஆனால், தொடர் இலக்கணம் தொடர்பான முழுமையான செய்திகள் காணப்படவில்லை. அண்மைக் காலத்தில் தொடரிலக்கண ஆராய்ச்சி விரிவாக வளர்ந்துள்ளன.

**எ.கா.**

எனக்கு அவரைத் தெரியும்
அவனுக்குக் கால் வலிக்கிறது
அவருக்கு என்மேல் கோபமாக இருக்கிறது

மேற்கண்ட தொடர்களை இலக்கண நோக்கில் பார்க்கும்போது எழுவாய் இல்லை. இப்படி எழுவாய் இல்லாத தொடர்கள் நமக்கு ஒரு வியப்பை உண்டாக்குகின்றன.

இலக்கணத்தில் எழுவாய் இல்லாத தொடருக்கும் நாம் இடம் தரவேண்டும். இவற்றைத் தோன்றா எழுவாய் என்றும் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி, தோன்றா எழுவாய்க்குரிய தொடர்களாகக் கொள்வதும் தவறு. எனவே, இவற்றை எழுவாய் இல்லாத தொடர்கள் என ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றைப் பற்றி நாம் விரிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### 4.3.8 அல்ல என்னும் சொல்லாட்சி

வேறு, உண்டு, இல்லை முதலான வினைகளைப் போலவே, 'அல்ல' என்னும் சொல் ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**எ.கா.**

எழுதியது அவனல்ல
எழுதியது அவளல்ல
உங்களை அல்ல
உங்களுக்கல்ல

எனப் பயன்படுத்தப்படுகிறது.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல ஆகிய திரிபு வடிவங்களைப் பின்வருமாறு பயனிலையாகப் பயன்படுத்தும்போது, 'அவர்கள்' என்ற எழுவாய்க்குத் தனிவடிவம் உருவாக்கவேண்டும்.

**எ.கா.**

அவன் அல்லன்
அவள் அல்லள்
அவர் அல்லர்
அது அன்று
அவை அல்ல
அவர்கள் அல்லர்கள்

இவ்வாறாக இக்கால இலக்கணத்தில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னும் கருத்திற்கேற்ப மொழி வளர்ச்சியை நாம் வரவேற்க வேண்டும்.

## 4.4 வாக்கிய அமைப்புகள்

### வாக்கிய அமைப்புகள்

சொற்கள் பல தொடர்ந்து நின்று ஒரு கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பது வாக்கியம் எனப்படும். ஒரு வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்புகள் எழுவாய், பயனிலை, செயப்படுப்பொருள் ஆகியன.

எ.கா.

வெண்ணிலா கவிதை எழுதினாள்.

| | | |
|---|---|---|
| வெண்ணிலா | – | எழுவாய் (கருத்து எழுகின்ற வாயிலாக விளங்குவதால் எழுவாய்) |
| எழுதினாள் | – | பயனிலை (வாக்கியத்தின் செயலை விளக்குவதால் பயனிலை) |
| கவிதை | – | செயப்படுப்பொருள் |

இவ்வாறு ஒரு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும, பயனிலை இறுதியிலும், செயப்படுப்பொருள் இடையிலும் வரும். எனினும் விரைவு, வெகுளி, அச்சம், மகிழ்ச்சி முதலான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களில் இம்முறை மாறி வரும்.

| | | |
|---|---|---|
| வென்றான் மணி பந்தயத்தில்! | – | இவ்வாக்கியத்தில் பயனிலை முதலில் வருகிறது. (விரைவு) |
| போ! போ! வெளியே இனியா! | – | இவ்வாக்கியத்தில் எழுவாய் இறுதியில் வந்துள்ளது. (வெகுளி) |
| பையைப் பறிக்கொடுத்தாள் சீதா | – | இவ்வாக்கியத்தில் செயப்படுப்பொருள் முதலில் வந்துள்ளது. (அச்சம்) |
| பரிசு பெற்றான் கண்ணன் | – | இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் முதலில் வந்துள்ளது. (மகிழ்ச்சி) |

### 4.4.1 வாக்கிய வகைகள்

கருத்து முற்றுப் பெற்ற சொற்றொடர் வாக்கியம் எனப்படும். இவ்வாக்கியங்களைக் கருத்து அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் வினை அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

- **கருத்து வகை வாக்கியங்கள்**

கருத்து வகை வாக்கியங்கள் நான்கு வகைப்படும். அவை:

1. செய்தி வாக்கியம்
2. கட்டளை வாக்கியம்
3. வினா வாக்கியம்
4. உணர்ச்சி வாக்கியம்

**செய்தி வாக்கியம்** என்பது, கூற வந்த செய்தியைத் தெளிவாகக் கூறுவதாகும்.

**எ.கா.**

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

**கட்டளைவாக்கியம்** என்பது, முன்னால் நிற்பவரை ஒரு செயலைச் செய்ய ஏவுவதாகும்.

**எ.கா.**

திருக்குறளைப் படி

**வினா வாக்கியம்** என்பது, ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமைவதாகும்.

**எ.கா.**

திருக்குறளை எழுதியவர் யார்?

**உணர்ச்சி வாக்கியம்** என்பது, வியப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக அமைவதாகும்.

**எ.கா.**

என்னே ! திருக்குறளின் பொருட் சிறப்பு.

### 4.4.2 அமைப்பு வகை வாக்கியங்கள்

வாக்கியங்களை அமைப்பு வகையில் மூன்று வகையாகப் பிரிப்பர். அவை,

1. தனி வாக்கியம்
2. தொடர் வாக்கியம்
3. வினா வாக்கியம்
4. கலவை வாக்கியம்

**தனி வாக்கியம்** என்பது, ஓர் எழுவாயோ ஒன்றுக்கு மேற்பட்டஎழுவாய்களோ வந்து ஒரு பயனிலையைக் கொண்டு முடிவதாகும்.

**எ.கா.**

பாரி வந்தான்.

பாரியும் கபிலனும் வந்தனர்.

**தொடர் வாக்கியம்** என்பது, ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளைப் பெற்றுவருவது ஆகும்.

**எ.கா.**

தமிழரசி போட்டியில் பங்கேற்றாள்; வெற்றி பெற்றாள்;

பரிசு பெற்றாள்.

**கலவை வாக்கியம்** என்பது, முற்றுத் தொடராக அமைந்த ஒரு முதன்மை வாக்கியமும் எச்சத் தொடர்களாக அமைந்த பல துணை வாக்கியங்களும் கலந்து வருவது ஆகும்.

**எ.கா.**

தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயல வேண்டும்.

### 4.4.3 வினை வகை வாக்கியங்கள்

வாக்கியங்களில் வினைகள், முற்றாகவோ எச்சமாகவோ இடம்பெறுகின்றன. அவ்வினைகளின் அடிப்படையில் அவற்றைப் பெற்று வரும் வாக்கியங்களின் பெயர் அமைகின்றன. இவ்வாக்கியங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உடன்பாட்டு வினை / எதிர்மறை வினை வாக்கியங்கள்
2. செய்வினை / செயப்பாட்டு வினை வாக்கியங்கள்
3. தன்வினை / பிறவினை வாக்கியங்கள்

- **உடன்பாடு / எதிர்மறை வினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகள் உடன்பாட்டில் உள்ளனவா? எதிர்மறையில் உள்ளனவா? என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயரிடப்படுகின்றன.

**எ.கா.**

உடன்பாட்டு வினை – காந்தியை அனைவரும் அறிவர்.
எதிர்மறை வினை – காந்தியடிகளை அறியாதார் இலர்.

- **செய்வினை / செயப்பாட்டுவினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகள் செய்வினைக்கு உரியனவா செயப்பாட்டுக்கு உரியனவா என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயர்பெறுகின்றன.

**எ.கா.**

செய்வினை – பேகன் போர்வை அளித்தான்.
செயப்பாட்டுவினை – பேகனால் போர்வை அளிக்கப்பட்டது.

- **தன்வினை / பிறவினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகளை எழுவாயே செய்கிறதா அல்லது தான் வினையாற்றாமல் பிறரை அவ்வினை செய்யத் தூண்டுகிறதா என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயர் பெறுகின்றன.

**எ.கா.**

தன் வினை – பாரி உண்டான்

பிற வினை – பாரி உண்பித்தான்

முதல் வாக்கியத்தில் பாரி என்னும் எழுவாய் உண்ணும் செயலைச் செய்வதால் அது தன்வினை வாக்கியமாகிறது.

இரண்டாம் வாக்கியத்தில் உண்ணும் செயலை வேறு யாரோ செய்ய எழுவாய் துணைசெய்வதாக உள்ளதால் அது பிறவினை வாக்கியமாகிறது.

### 4.4.4 ஒழுங்குபட எழுதுதல்

ஒரு தொடரில் எழுவாய் முன்னும், பயனிலை இறுதியிலும் இருத்தல் வேண்டும். இம்முறை இன்றியமையாத சில இடங்களில் மாறி வரும். எழுவாய் அடைமொழி எழுவாய்க்கு முன்னும், பயனிலை அடைமொழி பயனிலைக்கு முன்னும் இருத்தல் வேண்டும்.

**எ.கா.**

'புதிய அறிவியல் விரைந்து பரவுகிறது'

இதில் அறிவியல் என்பது எழுவாய். புதிய என்பது எழுவாய்க்கு அமைந்த அடைமொழி. 'பரவுகிறது' என்பது பயனிலை. 'விரைந்து' என்பது பயனிலைக்கு அமைந்த அடைமொழியாகும்.

### 4.4.5 எழுவாய் பயனிலை

ஒவ்வொரு தொடரும் எழுவாய், பயனிலை ஆகியவற்றை உடையதாய் இருத்தல் வேண்டும். எழுவாய் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்கும்.

**எ.கா.**

செங்கதிர் குழல் ஊதினான்

இதில் செங்கதிர் என்னும் எழுவாய் வெளிப்படையாக வந்துள்ளது

வேலைகள் செய்து வந்தேன்; சோறு தாருங்கள்

இதில் யான், நீங்கள் என்னும் எழுவாய்கள் வெளிப்படவில்லை.

எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண் முதலியவற்றால் ஒன்றுக்கொன்று பொருத்தமுற அமைதல் வேண்டும். பால் காட்டும் விகுதிபெறாத அஃறிணைப் பெயர்ச்சொற்கள் ஒருமை வினையோடும் பன்மை வினையோடும் முடியும்.

### 4.4.6 சொல் முடிபுகளறிதல்

ஒரு தொடரிலுள்ள எழுவாய், பயனிலை ஆகியவற்றை அறிதலன்றி, ஏனைய சொற்களின் முடிபுகளை அறிதலும் இன்றியமையாகும். நீண்ட தொடர்களை எழுதும்போது சொல் முடிபை மாணவர் நோக்க பெரிதும் இடர்ப்படுவர். பெயரெச்ச வினையெச்சங்களின் முடிபும் வேற்றுமை உருபுகளின் முடிபும் இடைச் சொற்களின் முடிபும் அறிதல் வேண்டும்.

**எ.கா.**

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வரும் துன்பத்தைப் போலக் கொண்டு பேணும் இரக்கமுடைமையே அறிவினால் ஆகும் பெரும்பயன்

1. பிற –இடைச்சொல் – உயிர்களுக்கு என்னும் பெயரைச் சிறப்பித்தது.
2. உயிர்களுக்கு – உருபேற்ற சொல் – வரும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.
3. வரும் – பெயரெச்சம் – துன்பத்தை என்னும் உருபேற்ற சொல்லோடு முடிந்தது.
4. துன்பத்தை – உருபேற்ற சொல் – போல என்னும் இடைச்சொல்லோடு முடிந்தது
5. போல – உவம உருபிடைச் சொல் – கொண்டு என்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.
6. கொண்டு – வினையெச்சம் – பேணும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.
7. பேணும் – பெயரெச்சம் – இரக்கமுடைமையே என்னும் எழுவாயுடன் முடிந்தது.
8. இரக்கமுடைமையே – எழுவாய் – அறிவினால் என்னும் பெயர்ச்சொல்லுடன் முடிந்தது.

9. அறிவினால் – உருபு ஏற்ற பெயர்ச்சொல் – ஆகும் என்னும் பெயரெச்சத்துடன் முடிந்தது.
10. ஆகும் – பெயரெச்சம் – பெரும்பயன் என்னும் சொல்லுடன் முடிந்தது.
11. பெரும்பயன் – பெயர்ச்சொல்– பயனிலையாக வாக்கியத்தை முடித்து நின்றது.

இவ்வாறு ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சொற்கள் ஒவ்வொன்றின் முடிவையும் அறிவதனால் பிழையற எழுதும் திறமை ஏற்படும்.

### 4.4.7 எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைக் கண்டறியும் முறை

வினைமுற்றுச்சொல் பயனிலை ஆகும். பயனிலையுடன் யார் ? எது ? என்னும் வினாக்களை எழுப்பின் அவற்றிற்கு விடையாக வருவது எழுவாய். எழுவாயுடன் யாரை, எதை என்னும் வினாக்களைத் தொடுத்தால் அவற்றிற்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

| வ. எண். | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1 | தமிழர்கள் | வாழ்வின் இலக்கணத்தை | அறிவார்கள் |
| 2 | கண்ணகி | சினங்கொண்டு மதுரையை | எரித்தாள் |
| 3 | வள்ளல்கள் | பழுத்த மரத்தைப் | போன்றவர்கள் |
| 4 | தாய்மொழி | கல்வியைக் கற்பதே | சிறந்தது |

## 4.5 மொழிப் பிழைகள்

### மொழிப் பிழைகள்

அறிவியல் போக்கை மிகுதியாகக் கையாண்டு அறிவியலையும் ஆராயும் முறைகளையும் செம்மைப்படுத்திய கலைத்துறை மொழியியலேயாகும். மொழியின் இயலை ஆராயும் கலைக்கு மொழியியல் (Linguistics) என்பது பெயர். அதனை ஆராய்வோரை மொழியியலர் என்பர். பைலாலஜி (Philology) என்ற சொல் வழக்கிழந்து வருகிறது. மொழி என்று பிறந்ததோ அன்றே மொழியாராய்ச்சியும் பிறந்து விட்டது. அறிவியல் துறையாக, ஓர் ஆக்கத்துறையாக இன்றுதான் இது வளர்ந்து வருகிறது. கி.பி.19–ஆம் நூற்றாண்டில் தான் இன்றைய மொழியியல் நல்லதொரு அடிப்படையில் வளரத் தொடங்கியது எனலாம்.

திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழமையான நூல்களுள் முதன்மையானது தொல்காப்பியமாகும். இது ஓர் இலக்கண நூலாகும். தமிழ் இலக்கியங்கள் இந்நூலை முதலாகக் கொண்டுள்ளன. திராவிட மொழிகளுள் இந்நூல் மிக முந்திய நூலாகக் கருதப்படுகிறது. எனவே, தமிழ் மொழியின் பழைமையே திராவிட மொழிகளின் பழைமையும் பெருமையும் கொண்டதாகும்.

தொல்காப்பியம் கி.மு. மூன்றாவது நூற்றாண்டில் தோன்றியதெனலாம். உலக மொழிகளில் காணப்படும் பிற முதல் நூல்களையெல்லாம் ஆராயின், இந்நூலின் போக்கும் அமைப்பும் அதில் காணப்படும் செய்திகளும் வேறு எந்த மொழிகளுக்கும் குறைந்தன இல்லை.

ஒரு மொழியின் அமைப்பினை ஆராய ஒலியியல் அறிவும் ஆராய்ச்சியும் மொழியாராய்ச்சிக்கு இன்றியமையாதன. எழுத்துக்களைப் பற்றிக் கூறப்புகுந்த தொல்காப்பியர் பிறப்பியல் என்று ஓர் இயலைத் தோற்றுவித்து அதன்கண் பல்வேறு எழுத்துக்களின் பிறப்பைப் பல்வேறு நூற்பாக்களில் குறிப்பிட்டுச் சொல்கிறார். இன்றைய ஒலியியலாளர்கள் கூறுமளவிற்குத் தொல்காப்பியத்தில் தெளிவு இல்லாமலிருந்த போதிலும் கூடப் பல்வேறு ஒலிகளின் பிறப்பைச் சிறந்த முறையில் கூறிச்சென்ற பெருமை தொல்காப்பியர்க்குண்டு.

ஒலிகளை அறிகுறிகளாக அமைத்துக் கொண்டு கருத்துக்களை உணர்த்துவது மொழியாகும். கருத்துக்களும் உலகிற்குப் பொதுவானவை. ஒலிகளுக்கும் கருத்துக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் அறிகுறிகள் மொழிக்கு மொழி வேறுவேறாக உள்ளன. எனவேதான், உலகில் பலவகை மொழிகள் உள்ளன.

தெளிவற்ற குழப்பமான நிலையில் கதம்பமாக உள்ள கருத்துக்களுக்கும் ஒலிகளுக்கும் தெளிவும் ஒழுங்கும் தருவது மொழி ஆகும். மொழி இல்லையானால் கருத்துக்களின் வளர்ச்சி இல்லையெனலாம். தெளிவும் ஒழுங்கும் இல்லையாகும்.

மொழி பேச்சு மொழி, எழுத்துமொழி என இருவகைப்படும். பேச்சு மொழியில் உள்ள ஒலிகளாகிய அறிகுறிகளுக்கு எழுத்து வடிவில் அடையாளங்களமைத்து எழுத்துக்களெனவும் சொற்களெனவும் மக்கள் அழைக்கின்றனர்.

மொழியை ஆராய்வோர் மொழிக்குப் புறம்பான மக்களின் வரலாறு, நாகரிகம் முதலியவற்றை ஆராய்தலுமுண்டு. மொழியின் அகத்துறுப்புக்களான ஒலியியல்,

சொல்லமைப்பு, சொற்றொடரமைப்பு, சொற்பொருளியல் ஆகியவற்றை ஆராய்தலுமுண்டு. ஒலியியல் முதலியவற்றை ஆராய்தலே மொழியியலாகும்.

மொழியின் தோற்றமும் சொற்களின் பிறப்பும் பொருள் வளர்ச்சியும் பற்றிய ஆராய்ச்சியும் (Etymology) மொழியியலுக்கு ஓரளவு புறமானதாகவே கருதப்படுகிறது. ஆயின் சொல்லமைப்பு (Morphology) சொற்றொடரமைப்பு (Syntex) ஆகியவை இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றன.

### 4.5.1 மொழியியல் வளர்ச்சி

1. எழுத்து மொழியை ஆராய்ந்து இலக்கியங்களை ஆய்ந்து அந்த மொழியின் எழுத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் இவ்வாறு உள்ளன என்று கூறும் இலக்கணம் அமைந்த நிலை முதல் நிலை.
2. பழைய நூல்களை ஆய்ந்து அவற்றின் தொடர்களைத் திருத்தவும் விளக்கவும்கூடிய வகையில் மொழியின் அமைப்பு இன்னது என்று வகுத்த நிலை அடுத்ததாகும்.
3. ஒரு மொழியை மட்டும் ஆராய்வதோடு நிற்காமல் அதனோடு தொடர்பு கொண்ட சில மொழிகளை ஆராய்ந்து ஒப்பிட்டு அவற்றின் பொதுத்தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் உணரும் ஒப்பியல்முறை அடுத்து வளர்ந்தது.

மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து ஒப்பியல் மொழி நூல்கள் எழுந்த நிலை இதுவாகும். இந்தியாவிற்கு வந்த மேலைநாட்டார் தம் மொழிகளோடு வடமொழியை ஒப்பிட்டுப் பல பொதுத்தன்மைகளைக் கண்டு வியந்தனர். அதுபோது தோன்றி வளர்ந்த ஒப்பியலாராய்ச்சியைத் தொடர்ந்து பல்வேறு மொழிகளின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அறிஞர் பலர் பல புதிய உண்மைகளைக் கண்டு உலகிற்குணர்த்தினர்.

மொழியை ஆராய்ந்தவர்கள் எழுத்து மொழியையே இலக்கியம் முதலியவற்றில் கண்ட மொழியையே தம்தம் ஆராய்ச்சிக்கு உரியதாகக் கொண்டு பேச்சு மொழியைப் புறக்கணித்தார்கள். அதனால் விளங்கத்தக்க உண்மைகள் பல விளங்காமற் போயின. பேச்சு மொழியே உயிருள்ள மொழியாகும். எழுத்து மொழி கற்றவர்கள் சிலர் கூடி அமைத்துக் கொண்டதாகும். பேச்சு மொழி வாழும் மனிதனைப் போன்றது. எழுத்து மொழி அவனது படத்தைப் போன்றது.

மனிதனை ஆராயாமல் மனிதனின் படம் போன்று எழுத்து மொழியை ஆராய்ந்த காரணத்தால் தவறுகள் பல நேர்ந்தன. தமிழ் மொழியில் உயிர்மெய்

என்பதைப் பிற்காலத்தார் ஓரெழுத்தாகக் கொண்டமைக்கு காரணம் அதுவே. Thick எனும் ஆங்கிலச் சொல்லில் (த் இ க்) எனும் மூன்றொலிகள் இருக்க அதை 5 எழுத்துச் சொல் எனக் கொள்ளும் தவறு நேர்கிறது.

| பேச்சுத்தமிழ் | எழுத்துத்தமிழ் |
|---|---|
| பேச்சு மொழியை ஆராய்தல் எளிதன்று | எழுத்து மொழியை ஆராய்தல் எளிது |
| பேச்சுமொழி செவிக்கு மட்டும் புலனாகி உடனே மறைந்து விடும் | இது கட்புலனாவது. யாவரும் எளிதில் எழுதிக் காக்கக் கூடியது |
| செவிவழியாக இலக்கியம் நீடு வாழ்வதில்லை | எழுதப்படும் இலக்கியம் தலைமுறை தலைமுறையாகப் பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்பதால் பெருமதிப்பும் செல்வாக்கும் பெறுகிறது. தவிர எழுத்து மொழிக்குத் துணையாக நிகண்டுகள், அகராதிகள் இலக்கணநூல்கள் முதலியன அமைந்து சிறப்புத் தேடித்தருகின்றன. |

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் வேறுபாடு தோன்றும் இடங்களில் எழுத்து மொழியின் தீர்ப்பு வலிமைமிக்கதாக விளங்குகிறது. ஆகவே, மொழியாராய்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு எழுத்து மொழியே முன் வந்து துணை நிற்கிறது.

மொழியியல் வளர்ந்து முன்னேறிய பின்னரே அது போதாது என்றும் குறையுடையது என்றும் தெளிவு ஏற்படலாயிற்று ஆங்காங்கே மக்கள் பேசும் பேச்சுமொழியைப் பல கருவிகள் கொண்டு ஒலிப்பதிவு செய்தும் கேட்டுணர்ந்தும் ஆராயும் முறை பெருகுவதாயிற்று. அவற்றின் பயனாக இன்று மொழியியல் திட்ப நுட்பம் வாய்ந்த அறிவியல் துறையாக வளர்ந்து வருகிறது.

### 4.5.2 பிழைகள் (எழுத்து, சொல், தொடர், சந்தி)

நாம் நமது எண்ணங்களைப் பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் வெளிப்படுத்துகின்றோம். அவ்வாறு வெளிப்படுத்தும்போது பேச்சிலும் எழுத்திலும் பல்வேறு பிழைகளைச் செய்கின்றோம். அப்பிழைகளை எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்பிழை, சந்திப்பிழை எனப் பலவாறாக வகைப்படுத்தலாம். முறையாகக் கற்றுக் கொள்ளாமையால் இப்பிழைகள் ஏற்படுகின்றன.

இவ்வகையான பிழைகள் ஏதுமின்றி எழுதுவதைத்தான் எழுத்தாற்றல் திறன் என்கின்றனர். தமிழ்மொழிக் கல்வியில் எழுதுதல் திறனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியையும், சுய சிந்தனையையும் பிழையின்றி எழுதும் திறன்பெற வேண்டுமென அனைவரும் விரும்புகின்றனர். எனவே, மேற்கண்ட பிழைகளை மாணவர்கள் செய்யா வண்ணம், இளம் வயதிலேயே உரியநேரத்தில், உரிய இடத்தில், உரிய முறையில் மொழியை ஆசிரியர் கற்பிக்கவேண்டும். இவ்வலகில் மாணவர்கள் செய்யும் பிழைகள் பல விளக்கப்பட்டுள்ளன.

- **எழுத்துப்பிழை**

சில எழுத்துகள் வரிவடிவத்தில் ஒரே மாதிரியாக இருப்பதாலும், சில எழுத்துகள் ஒலி வடிவத்தில் ஒரே மாதிரியாக உச்சரிக்கப்படுவதாலும் எழுதும்போது எழுத்துப்பிழைகள் தோன்றுகின்றன.

| **ஒரே மாதிரியான வடிவம் உள்ள சில எழுத்துகள்** | | | | |
|---|---|---|---|---|
| அ – ஆ<br>கு –ரு | எ – ஏ<br>க – சு | ஒ – ஒ, ஔ<br>கு – சூ – ஞ | ன – ண<br>மு – ழு | னை – ணை<br>ல – வ |
| **ஒரே மாதிரியாக ஒலிக்கும் சில எழுத்துகள்** | | | | |
| ன – ண<br>னை – ணை<br>லை – ளை | ல – ள<br>லி – ளி<br>லு – ளு | ர – ற<br>ரி – றி | பி – பீ<br>ய – யா | ழ, ல, ள |

மேற்கண்டவாறு எழுத்துகள் ஒரே மாதிரியாக இருப்பதால், எழுதும்போது சரியான எழுத்தை எழுத இயலாமல் பிழைபட எழுதும்நிலை ஏற்படுகிறது. மேலும், ஒத்த ஒலிப்புடைய எழுத்துகளை எழுதும்போதும் இவ்வாறே பிழைகள் ஏற்படுகின்றன. எழுதும்போது ஓர் எழுத்திற்கு மாற்றாக வேறொரு எழுத்தை (ஒத்த வடிவுடைய) எழுதுவதால் பொருள் வேறு ஏற்படுகிறது.

**எ.கா.**

பந்து என்பதை பத்து
அழுக்கு என்பதை அமுக்கு
ஐயா என்பதை ஜயா

எனப் பொருள் மாற்றம் ஏற்படுகிறது.

## ஒலித்தல் பயிற்சி

எழுத்துகளின் ஒலி வேறுபாட்டை அறிய நா நெகிழ், நா பிறழ் பயிற்சிகளை அளிக்கவேண்டும். ஒரே வகையான சொல் அல்லது எழுத்தை பல முறைக் கூறுமாறு செய்தல் நாநெகிழ் பயிற்சி எனப்படும். ஒத்த ஒலியுடைய வெவ்வேறு சொற்களை அடுத்தடுத்து வருமாறு உச்சரிக்கப் பயிற்சி அளிப்பது நா பிறழ் பயிற்சி எனப்படும்.

## எழுதுதல் பயிற்சி

கையெழுத்துகள் தெளிவாகவும், செம்மையாகவும் அமைய வரியொற்றி எழுதும் பயிற்சியை அளித்தல் வேண்டும். நான்குவரி, இரண்டு வரி கோடுகள் கொண்ட குறிப்பேடுகளை இப்பயிற்சிக்கு பயன்படுத்தலாம்.

பார்த்து எழுதுதல் – பாடநூலில் உள்ள உரைப்பகுதிகளைப் பார்த்து எழுதிவரச் செய்யலாம். ஆசிரியர், கரும்பலகையில் எழுதியதை மாணவர்களைப் பார்த்து எழுதச் செய்யலாம்.

கேட்டு எழுதுதல் – ஆசிரியர் சொல்ல, அதை மாணவர்கள் உடனுக்குடன் கேட்டு எழுதவேண்டும். இப்பயிற்சில் கேட்டல் திறனும், நினைவாற்றல் திறனும், எழுதுதல் திறனும் வளரும்.

சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஏற்படும் எழுத்துப் பிழையும் தடுத்திடும்.

1. சொல்லின் முதல் எழுத்தைப் பிழையின்றி எழுதுதல்

| பிழை | திருத்தம் |
|---|---|
| லட்டு | இலட்டு |
| வுணவு | உணவு |
| ஆக்கம் | ஊக்கம் |
| வொட்டகம் | ஒட்டகம் |
| வோட்ட | ஓட்டு |

2. சொல்லின் இடையில் வரும் எழுத்தைப் பிழையின்றி எழுதுதல்

| பிழை | திருத்தம் |
|---|---|
| கன்டான் | கண்டான் |
| பூன்டி | பூண்டி |
| வன்டி | வண்டி |
| கண்று | கன்று |
| வன்தான் | வந்தான் |

3. சொல்லின் இறுதியில் வரும் எழுத்தைப் பிழையின்றி எழுதுதல்

| பிழை | திருத்தம் |
|---|---|
| மைசூர்பாக் | மைசூர்பாகு |
| பீட்ரூட் | பீட்ரூட்டு |
| பகவத்சிங் | பகவத்சிங்கு |

4. சொல்லிற்கு இடையில் இரண்டு வல்லொற்றுகளை சேர்த்து எழுதும் பிழையைத் தவிர்த்தல்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| பயிற்ச்சி | பயிற்சி |
| விற்ப்பனை | விற்பனை |
| ஆட்ச்சி | ஆட்சி |
| கற்ப்பாள் | கற்பாள் |
| முயற்ச்சி | முயற்சி |

- **சொற்பிழை**

நாம், பேச்சு வழக்கில் பல பிழையான சொற்களைப் பயன்படுத்துகிறோம். அவை கொச்சை சொற்கள், வழுச்சொற்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியனவாகும்.

| கொச்சைச் சொற்கள் | திருந்திய வடிவம் |
|---|---|
| வெட்டிப்பேச்சு | வெற்றுப்பேச்சு |
| வேண்டாம் | வேண்டா |
| வலதுபக்கம் | வலப்பக்கம் |
| இடதுபக்கம் | இடப்பக்கம் |
| வெங்கலம் | வெண்கலம் |

| | |
|---|---|
| மோர்ந்து | மோந்து |
| சிகப்பு | சிவப்பு |
| துளிர் | தளிர் |
| வுடம்பு | உடம்பு |
| வவுத்துவலி | வயிற்றுவலி |

நாம் பயன்படுத்தும் சொற்களில் எழுத்து மாறுபடும்போது, அவற்றின் பொருளும் மாறுபடும். எனவே, சொற்களை எழுதும்போது, எழுத்துப் பிழையின்றி எழுதவேண்டும்.

**எ.கா.**

| | |
|---|---|
| காலை (காலைப்பொழுது) | காளை (எருது) |
| தால் (நாக்கு) | தாள் (பாதம்) |
| வழி (பாதை) | வழி (பாதை) |
| தழை (இலை) | தளை (கட்டு) |
| எரி (தீ) | எறி (வீசு) |
| கரி (அடுப்புக்கரி) | கறி (காய்கறி) |
| திரை (அலை) | திறை (வரி) |

## சொல்லிலக்கணப் பிழைகள்

அல்லன், அல்லள், அல்லர், அல்ல, அன்று ஆகிய சொற்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

| வ. எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | நான் அவனல்ல | நான் அவனல்லன் |
| 2. | நான் அவளல்ல | நான் அவளல்லல் |
| 3. | என் நண்பர் அவரல்ல | என் நண்பர் அவரல்லர் |
| 4. | என் புத்தகம் அது அல்ல | என் புத்தகம் அது அன்று |
| 5. | அவை குதிரைகள் அன்று | அவை குதிரைகள் அல்ல |

## குறிப்பு

- அல்ல என்னும் சொல்லை அஃறிணை பன்மைக்குப் பயன்படுத்தவேண்டும்
- அன்று என்னும் சொல்லை அஃறிணை ஒருமைக்குப் பயன்படுத்தவேண்டும்

- அல்லன் என்னும் சொல்லை உயர்திணை ஆண்பால் ஒருமைக்குப் பயன்படுத்தவேண்டும்
- அல்லள் என்னும் சொல்லை உயர்திணை பெண்பால் ஒருமைக்குப் பயன்படுத்தவேண்டும்
- அல்லர் என்னும் சொல்லை உயர்திணை பலர்பாலைக் குறிக்கப் பயன்படுத்தவேண்டும். ஒருவரை மரியாதை காரணமாக உயர்வாகச் சொல்லும்போதும் 'அல்லர்' என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம்.

'கள்' விகுதியைத் தவறாகப் பயன்படுத்துதல்

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | அவைகள் நமக்குப் பயன்படுகின்றன | அவை நமக்குப் பயன்படுகின்றன |
| 2. | மற்றவைகள் ஓடிவிட்டன | மற்றவை ஓடிவிட்டன |

## குறிப்பு

- 'அவை' என்னும் சொல் பன்மையைக் குறிக்கும் சொல்லாகும். அதனுடன் 'கள்' என்னும் பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுதல் தவறாகும்.
- 'மற்றவை' என்னும் சொல்லும் பன்மையைக் குறிக்கும் சொல்லாகும். அதனுடன் 'கள்' என்னும் பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுதல் தவறாகும்.

ஒரு, ஓர் எண்ணடைகளைத் தவறாக எழுதுதல்

| பிழை | திருத்தம் |
|---|---|
| ஒரு ஆலமரம் உள்ளது | ஓர் ஆலமரம் உள்ளது |
| ஓர் பசு மேய்ந்தது | ஒரு பசு மேய்ந்தது |

## குறிப்பு

- 'ஒரு' என்னும், எண் அடைமொழியை உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல்லின் முன் பயன்படுத்தவேண்டும்.
- 'ஓர்' என்னும் எண் அடைமொழியை உயிர் எழுத்தில் தொடங்கும் சொல்லின் முன் பயன்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு என்னும் சொல்லைத் தவறாகப் பயன்படுத்துதல்

ஒவ்வொரு என்னும் சொல்லை, ஒருமையைக் குறிக்கும் சொல்லின்முன் பயன்படுத்த வேண்டும்.

எ.கா.

'ஒவ்வொரு சொல்லும் முக்கியமானது' என எழுதவேண்டும்.

'ஒவ்வொரு சொற்களும் முக்கியமானவை' என எழுதுவது தவறானதாகும்.

நடைமுறையில் தவறாகப் பயன்படுத்தப்படும் சொற்களும் அவற்றின் திருத்தங்களும்.

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1 | அருகாமை | அருகில் |
| 2 | முயற்சித்தான் | முயன்றான் |
| 3 | பந்தக்கால் | பந்தற்கால் |
| 4 | எந்தன் | என்றன் |
| 5 | உந்தன் | உன்றன் |
| 6 | நந்நீராட்டு | நன்னீராட்டு |

**சொற்பிரிப்புத் தவறுகள்**

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1 | அவ் ஊர் | அவ்வூர் |
| 2 | வந்த உடன் | வந்தவுடன் |
| 3 | வீட்டில் இருந்து | வீட்டிலிருந்து |
| 4 | அவர்கள் இடம் | அவர்களிடம் |
| 5 | வர அழைத்தான் | வரவழைத்தான் |
| 6 | வெளி ஏறினார் | வெளியேறினார் |
| 7 | சொற் கோவை | சொற்கோவை |
| 8 | தெரிந்து கொள்க | தெரிந்துகொள்க |
| 9 | வந்து விட்டான் | வந்துவிட்டான் |
| 10 | மிகுதியாகும் ஆனால் | மிகுதியாகுமானால் |

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 11 | பலாச் செடி | பலாச்செடி |
| 12 | கட்டளை இட்டான் | கட்டளையிட்டான் |
| 13 | திரு நீலகண்டர் | திருநீலகண்டர் |

- **தொடரில் தோன்றும் பிழைகள்**

நாம் பயன்படுத்தும் தொடர்களில் பல்வேறு பிழைகள் தோன்றுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1 | ஆண்டுகள் சென்றது – தவறு<br>ஆண்டுகள் சென்றன – திருத்தம் | ஆண்டுகள் என்னும் சொல் பன்மையை உணர்த்துகிறது. அதற்கேற்ப சென்றன என்னும் பன்மைப் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும் |
| 2 | வண்டிகள் ஓடாது – தவறு<br>வண்டிகள் ஓடா – திருத்தம் | வண்டிகள் என்னும் சொல் பன்மையை உணர்த்துகிறது. அதற்கேற்ப ஓடா என்னும் பன்மைப் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும் |
| 3 | வருவதும் போவதும் கிடையாது – தவறு<br>வருவதும் போவதும் கிடையா – திருத்தம் | வருவது ஒரு செயல், போவது ஒரு செயல். எனவே, இவை பன்மையாகும். அதற்கேற்ப கிடையா என்னும் பன்மைப் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும். |
| 4 | அது நம்மிடம் உள – தவறு<br>அது நம்மிடம் உளது – திருத்தம் | அது – என்பது ஒருமையைக் குறிக்கும் சொல். எனவே, உளது என்னும் ஒருமைப் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும் |
| 5 | அவை இங்கே உளது – தவறு<br>அவை இங்கே உள – திருத்தம் | அவை – என்பது பன்மையைக் குறிக்கிறது. எனவே, அதற்கேற்ப உள என்னும் பன்மைப் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும் |
| 6 | இது எல்லாம் – தவறு<br>இவை எல்லாம் – திருத்தம் | இது – என்பது ஒருமை. எல்லாம் என்பது பன்மை. எனவே, எல்லாம் |

| வரிசை எண் | பிழை | திருத்தம் |
| --- | --- | --- |
| | | என்னும் பன்மைப் பயனிலைக்கு ஏற்ப இவை / அவை என்னும் எழுவாயைப் பயன்படுத்தவேண்டும். |
| 7 | நாயோ அல்லது பூனையோ வந்தது – தவறு<br>நாயோ பூனையோ வந்தது – திருத்தம் | நாய் + ஓ = நாயோ – இதில் ஐயத்தை உணர்த்தும் ஓகார இடைச்சொல் வந்ததுள்ளது. ஐயப் பொருளை உணர்த்தும் இடத்தில் அல்லது என்னும் மற்றொரு சொல்லைப் பயன்படுத்தவேண்டா. |
| 8 | மக்கள் கிடையாது – தவறு<br>மக்கள் இல்லை – திருத்தம் | கிடையாது – என்னும் சொல் அஃறிணைப் பொருட்களைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும். எ.கா. கடையில் மிளகு கிடையாது எனக் கூறுவர். கடையில் ஆள் கிடையாது எனக் கூறுதல் கூடாது. கடையில் ஆள் இல்லை என்றே கூறுவர். எனவே, கிடையாது என்னும் சொல்லிற்குப் பதிலாக இல்லை என்னும் சொல் பயன்படுத்தவேண்டும் |
| 9 | மதுரை என்ற நகரம் – தவறு<br>மதுரை என்னும் நகரம் – திருத்தம் | மதுரை – என்னும் ஊர் தற்காலத்திலும் இருந்து வருகிறது. எனவே, 'என்னும்' என்னும் நிகழ்காலத்தைக் குறிக்கும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும். 'என்ற' என்னும் சொல் இறந்த காலத்தைக் குறிக்கும் சொல்லாகும். |
| 10 | படத்தை இங்கே மாட்டியது யார் ? – தவறு<br>படத்தை இங்கே மாட்டியவர் யார் ? – திருத்தம் | மாட்டியது – என்னும் சொல் அஃறிணையைக் குறிக்கும் சொல்லாகும். 'மாட்டியவர்' என்பது உயர்திணையைக் குறிக்கும் சொல்லாகும். 'யார்' என்னும் சொல்லும் உயர்திணையைக் குறிக்கும் வினாப் பயனிலையாகும். எனவே, பயனிலைக்கு ஏற்றவாறு 'மாட்டியவர்' என்னும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் |
|---|---|---|
| 1 | அவர் எத்தனை களைப்பாய் இருந்தார் – தவறு<br>அவர் எவ்வளவு களைப்பாய் இருந்தார் – திருத்தம் | எத்தனை – என்னும் சொல் எண்ணிக்கையைக் குறிக்கும் சொல். ஒருவர் அடைந்த களைப்பை எண்ணமுடியாது. எனவே, எவ்வளவு என்னும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் |
| 2 | போன ஞாயிற்றுக்கிழமை பேசும் போது கூறினார் – தவறு<br>போன ஞாயிற்றுக்கிழமை பேசியபோது கூறினார் – திருத்தம் | போன ஞாயிறு என்பது கடந்த காலத்தைக் குறிக்கிறது. பேசும் என்பது எதிர்காலத்தைக் குறிக்கிறது. எனவே, கடந்தகாலத்திற்குப் பொருத்தமான பேசிய என்னும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் |
| 3 | நேரத்தைத் திரும்பப் பெறுவதெல்லாம் கிடையாது – தவறு<br>நேரத்தைத் திரும்பப் பெறுவதென்பது கிடையாது – திருத்தம் | நேரம் – என்னும் சொல் ஒருமையைக் குறிக்கிறது. எல்லாம் – என்னும் சொல் பன்மையைக் குறிக்கிறது. எனவே, ஒருமைக்கேற்ற 'என்பது' என்னும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் |
| 4 | குளம், குட்டை துப்புரவு செய்யப்படுகிறது – தவறு<br>குளம் குட்டை துப்புரவு செய்யப்படுகின்றன – திருத்தம் | குளம், குட்டை – இரண்டையும் சேர்த்தால் பன்மையாகும். 'செய்யப்படுகிறது' என்பது ஒருமையை உணர்த்தும் பயனிலையாகும். எனவே, பன்மைக்கு ஏற்ற 'செய்யப்படுகின்றன' என்னும் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும் |
| 5 | இந்தியாவைக் காப்பது நமது கிராமங்கள் – தவறு<br>இந்தியாவைக் காப்பவை நமது கிராமங்கள் – திருத்தம் | காப்பது – என்பது ஒருமையைக் குறிக்கிறது. கிராமங்கள் – என்பது பன்மையைக் குறிக்கிறது. எனவே, பன்மைக்கு ஏற்றவாறு காப்பது என்னும் ஒருமையைக் 'காப்பவை' எனப் பன்மையாக மாற்றவேண்டும். |
| 6 | நல்ல சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இராது – தவறு<br>நல்ல சமுதாயத்தில் ஏற்றத் | ஏற்றம், தாழ்வு – இரண்டையும் சேர்த்தால் பன்மையாகும். இராது என்பது ஒருமையைக் குறிக்கிறது. |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் |
| --- | --- | --- |
| | தாழ்வுகள் இரா – திருத்தம் | எனவே, பன்மைக்கு ஏற்ற 'இரா' என்னும் பயனிலையைப் பயன்படுத்தவேண்டும். |
| 7 | நல்ல சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இராது – தவறு<br>நல்ல சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இரா – திருத்தம் | ஒருவன் என்னும் சொல் ஆண்பாலைக் குறிக்கிறது. எனவே, ஆண்பாலுக்கு ஏற்ற பயனிலையான 'வேண்டியவனாய் இருக்கிறான்' என்பதைப் பயன்படுத்தவேண்டும் |
| 8 | நகரத்தில் கொடிய நோய்கள் வருமானால், அது பரவுவதற்கு முன்னரே அதைத் தடுப்பதற்கு வழிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் – தவறு<br>நகரத்தில் கொடிய நோய்கள் பரவுமானால், அவை பரவுவதற்கு முன்னரே அவற்றைத் தடுப்பதற்கு வழிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் – திருத்தம் | நோய்கள் – என்னும் சொல் பன்மையைக் குறிக்கிறது. எனவே, அதற்கு ஏற்றவாறு 'அது' என்னும் ஒருமையை 'அவை' என்னும் பன்மையாவும், 'அதை' என்னும் ஒருமையை 'அவற்றை' என்னும் பன்மையாகவும் மாற்றவேண்டும் |
| 9 | மேரிகோல்டு என்னும் சிறியபெண் தன் தகப்பன் முன் வரவில்லை – தவறு<br>மேரிகோல்டு என்னும் சிறுமி தன் தகப்பன் முன் வரவில்லை – திருத்தம் | சிறிய பெண் – என்னும் சொல் தமிழ் மரபுக்குப் பொருந்தாதது. எனவே, சிறுமி என்னும் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் |
| 10 | முக்காற் பங்குக்கு மேற்பட்ட ஜெனத்தொகை கிராமங்களில் இருக்கின்றன – தவறு<br>முக்காற் பங்குக்கு மேற்பட்ட ஜெனத்தொகை கிராமங்களில் இருக்கிறது – திருத்தம் | ஜெனத்தொகை – என்பது கூட்டத்தைக் குறிக்கும் ஒருமைச் சொல்லாகும். எனவே, 'இருக்கிறது' என்னும் ஒருமைப் பயனிலையைப் பயன்படுத்த வேண்டும். |

- **சந்திப்பிழைகள்**

இரண்டு சொற்கள் சேரும்போது அவற்றிற்கிடையே எழுத்துகள் தோன்றும், திரியும், கெடும். இயல்பாய் நிற்பதும் உண்டு. இதில் ஏற்படும் பிழைகள் சந்திப்பிழைகள் எனப்படும். சந்திப்பிழைகள் இருவகைப்படும். அவை ஒற்றுப்பிழை, பிற சந்திப்பிழை என்பனவாகும்.

விதிகளின் படி வல்லெழுத்து மிகும் இடங்கள் சில

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| 1 | தீரா துன்பம் – தவறு<br>தீராத் துன்பம் – திருத்தம்<br>ஓடா குதிரை – தவறு<br>ஓடாக்குதிரை – திருத்தம் | தீராத என்னும் சொல் தீரா என ஈற்றெழுத்து கெட்டு (த) வந்துள்ளது. இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும். எனவே, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லொற்று (த்) மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்ததுள்ளது. |
| 2 | வர சொன்னான் – தவறு<br>வரச்சொன்னான் – திருத்தம் | வர – என்னும் சொல் (ர் + அ = ர) 'அ' என்னும் எழுத்தை இறுதியாகக் கொண்ட வினைச் சொல்லாகும். இது 'சொன்னான்' என்னும் வினைச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. எனவே, இது அகர ஈற்று வினையெச்சம் எனப்படும். அகர ஈற்று வினையெச்சத்தில் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி வல்லினம் (ச) மிகுந்துள்ளது. |
| 3 | ஓடி போனான் – தவறு<br>ஓடிப்போனான் – திருத்தம் | அவ்வாறே ஓடி + போனான் என்பதும் (ம் + இ = டி) இகர ஈற்று வினையெச்சமாகும். எனவே, இகர ஈற்று வினை எச்சத்திலும் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி வல்லினம் மிகுந்தது. |
| 4 | எட்டுதொகை – தவறு<br>எட்டுத்தொகை – திருத்தம்<br>பத்துபாட்டு – தவறு<br>பத்துப்பாட்டு – திருத்தம் | எட்டு – என்பது எண்ணுப் பெயராகும். மேலும், எட்டு என்பது வன்றொடர் குற்றியலுகரமாகும். இவ்விரு விதிகளின்படி வல்லினம் (த்) மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 5 | பாலை குடித்தான் – தவறு | பால் + ஐ = பாலை என்பது |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| | பாலைக்குடித்தான் – திருத்தம்<br>நூலை படித்தான் – தவறு<br>நூலைப்படித்தான் – திருத்தம் | இரண்டாம் வேற்றுமை (ஐ) விதியாகும். எனவே, இரண்டாம் வேற்றுமை விதியில் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி 'க்' மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 6 | நீர் குடம் – தவறு<br>நீர்க்குடம் – திருத்தம்<br>தயிர் பானை – தவறு<br>தயிர்ப்பானை – திருத்தம்<br>மோர் குடம் – தவறு<br>மோர்க்குடம் – திருத்தம் | நீரை உடைய குடம் என்னும் தொடரே நீர்க்குடம் எனத் தொகையாக வந்துள்ளது. இத்தொடரில் ஐ என்னும் உருபும் (ரை = ர் + ஐ) 'உடைய' பயனும் மறைந்துள்ளது. எனவே, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும் எனும் விதிப்படி 'க்' மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |
| 7 | மல்லிகை பூ – தவறு<br>மல்லிகைப்பூ – திருத்தம்<br>தை திங்கள் – தவறு<br>தைத்திங்கள் – திருத்தம்<br>கோடை காலம் – தவறு<br>கோடைக்காலம் – திருத்தம் | மல்லிகை என்பது மல்லிகையை மட்டும் குறிக்கும் சிறப்புப்பெயர். பூ என்பது அனைத்துப் பூவையும் குறிக்கும் பொதுப்பெயர். சிறப்புப்பெயரும் பொதுப்பெயரும் சேர்ந்து வருவதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். எனவே, இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் எனும் விதிப்படி 'ப்' மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |
| 8 | தாமரை கண் – தவறு<br>தாமரைக்கண் – திருத்தம்<br>முத்து பல் – தவறு<br>முத்துப்பல் – திருத்தம் | தாமரை போன்ற கண் – என்பதே தாமரைக்கண் எனத் தொகையாக வந்துள்ளது. தாமரை, கண் இரு சொற்களுக்கு இடையில், 'போல' |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
| --- | --- | --- |
| | | என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இது உவமைத் தொகை எனப்படும். உவமைத்தொகையில் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி 'க்' மிகுந்துள்ளது. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 9 | நாய் குட்டி – தவறு<br>நாய்க்குட்டி – திருத்தம்<br>கிளி கூடு – தவறு<br>கிளிக்கூடு – திருத்தம் | நாயது குட்டி என்பதே நாய்க்குட்டி எனத் தொகையாக வந்துள்ளது. நாய் என்பது அஃறிணையாகும். இடையில் 'அது' என்னும் ஆறாம் வேற்றமை உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணை என்பதால் 'க்' மிகுந்துள்ளது. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 10 | பட்டு சேலை – தவறு<br>பட்டுச்சேலை – திருத்தம்<br>வெள்ளி தட்டு – தவறு<br>வெள்ளித்தட்டு – திருத்தம்<br>மோர் குழம்பு – தவறு<br>மோர்க்குழம்பு – திருத்தம் | பட்டால் ஆன சேலை என்பதே பட்டுச்சேலை எனத் தொகையாக வந்துள்ளது. 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் 'ஆன' என்னும் பயனும் மறைந்து வந்துள்ளது. இதனை மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்பர். மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி 'ச்' மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |
| 11 | குழந்தை பால் – தவறு<br>குழந்தைப்பால் – திருத்தம் | குழந்தைக்குக் கொடுக்கும் பால் என்பதே குழந்தைப்பால் எனத் |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| | கோழி தீனி – தவறு<br>கோழித்தீனி – திருத்தம் | தொகையாக வந்துள்ளது. இதில் 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபும், 'கொடுக்கும்' என்னும் பயனிலையும் மறைந்து வந்துள்ளன. இதனை நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனக் கூறுவர். நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும் எனும் விதிப்படி 'ப்' மிகுந்தது. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 12 | தண்ணீர் பாம்பு – தவறு<br>தண்ணீர்ப்பாம்பு – திருத்தம்<br>மலை தோட்டம் – தவறு<br>மலைத்தோட்டம் – திருத்தம்<br>காட்டு கோழி – தவறு<br>காட்டுக்கோழி – திருத்தம் | காட்டின் கண் இருக்கும் கோழி – என்பதே காட்டுக்கோழி எனத் தொகையாக வந்துள்ளது. இதில் 'கண்' என்னும் ஏழாம் வேற்றமை உருபும், இருக்கும் என்னும் பயனிலையும் மறைந்து வந்துள்ளன. இதனை ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனக் கூறுவர். ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி 'க்' மிகுந்துள்ளது. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |

**விதிகளின்படி வல்லெழுத்து மிகா இடங்கள் சில**

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| 1 | வேலைச் செய்தான் – தவறு<br>வேலை செய்தான் – திருத்தம் | வேலையைச் செய்தான் – என்பதே வேலை செய்தான் |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| | சிலைச் செய்தான் – தவறு<br>சிலை செய்தான் – திருத்தம்<br>கதைப் படித்தான் – தவறு<br>கதை படித்தான் – திருத்தம் | எனத் தொகையாக வந்துள்ளது. இதில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இது இரண்டாம் வேற்றுமைத் தொகை எனப்படும். இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது என்னும் விதிப்படி வல்லொற்று 'ச்' மிகக் கூடாது. இவ்வாறே பிறவும் மிகாமல் வந்துள்ளன. |
| 2 | தம்பியோடுப் பேசினான் – தவறு<br>தம்பியோடு பேசினான் – திருத்தம்<br>அன்பொடுக் கொடுத்தான் – தவறு<br>அன்பொடு கொடுத்தான் – திருத்தம்<br>படையோடுச் சென்றான் – தவறு<br>படையோடு சென்றான் – திருத்தம் | ஒடு, ஓடு என்பன மூன்றாம் வேற்றுமை உருபுகளாகும். எனவே, மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் வல்லினம் மிகாது எனும் விதிப்படி வல்லினம் மிகவில்லை. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |
| 3 | ஓடியக் குதிரை – தவறு<br>ஓடிய குதிரை – திருத்தம்<br>ஓடாதக் குதிரை – தவறு<br>ஓடாத குதிரை – திருத்தம்<br>நல்லக் குழந்தை – தவறு<br>நல்ல குழந்தை – திருத்தம்<br>பெரியப்பெட்டி – தவறு<br>பெரிய பெட்டி – திருத்தம் | தெரிநிலை மற்றும் குறிப்பு பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது. ஓடிய, ஓடாத என்பன தெரிநிலைப் பெயரெச்சங்களாகும். பெரிய, நல்ல என்பன குறிப்புப் பெயரெச்சங்களாகும். எனவே, இவற்றின் பின் வல்லினம் மிகவில்லை. |
| 4 | தம்பிப்போ – தவறு<br>தம்பி போ – திருத்தம்<br>வாழிப் பெரியீர் – தவறு<br>வாழி பெரியீர் – திருத்தம் | தம்பி, வாழி என்பன விளி வேற்றுமைகள். விளி வேற்றுமையின்படி வலி மிகாது எனும் விதிப்படி இவற்றின்பின் வலி மிகவில்லை. |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| 5 | அவனாப் போனான் – தவறு<br>அவனா போனான் – திருத்தம்<br>தம்பியோக் கேட்கிறான் – தவறு<br>தம்பியோ கேட்கிறான் – திருத்தம்<br>யாச் சிறியன – தவறு<br>யா சிறியன – திருத்தம் | ஆ, ஓ, யா என்னும் கேள்வி கேட்கும் வினாக்களுக்குப் பின் வல்லினம் மிகாது. |
| 6 | அவனேத்தான் கொடுத்தான் – தவறு<br>அவனேதான் கொடுத்தான் – திருத்தம்<br>தமயந்தியேச் சிறந்தவன் – தவறு<br>தமயந்தியே சிறந்தவன் – திருத்தம் | தேற்றம், பிரிநிலை ஆகிய பொருள்களில் வரும் ஏகாரங்களுக்குப் பின் வல்லினம் மிகாது |
| 7 | ஆதிப்பகவன் – தவறு<br>ஆதி பகவன் – திருத்தம்<br>தேசப்பக்தி – தவறு<br>தேசபக்தி – திருத்தம் | இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| 8 | சுடுச்சோறு – தவறு<br>சுடு சோறு – திருத்தம்<br>குடித்தண்ணீர் – தவறு<br>குடி தண்ணீர் – திருத்தம்<br>ஊறுக்காய் – தவறு<br>ஊறுகாய் – திருத்தம் | சுடுசோறு = சுட்டசோறு, சுடுகின்ற சோறு, சுடும் சோறு ஆகிய மூன்று காலமும் இதில் மறைந்துள்ளன. இவ்வாறு மூன்று காலமும் மறைந்து வருவது வினைத்தொகை எனப்படும். வினைத்தொகையில் வல்லினம் மிகாது என்னும் விதிப்படி இதில் வல்லினம் மிகவில்லை. இவ்வாறே பிறவும் வந்துள்ளன. |
| 9 | பொன்னிக் கணவன் – தவறு<br>பொன்னி கணவன் – திருத்தம்<br>கண்ணகிக் கோவலன் – தவறு<br>கண்ணகி கோவலன் – திருத்தம் | பொன்னிக்குக் கணவன் என்பதே பொன்னி கணவன் எனத் தொகையாக வந்துள்ளது. இது 'கு' என்னும் நான்காம் வேற்றுமைத் தொகையாகும். நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையின் |

| வரிசை எண் | பிழையும் திருத்தமும் | காரணம் / விதி |
|---|---|---|
| | | பின் வல்லினம் மிகாது என்னும் விதிப்படி வல்லினம் மிகவில்லை. இவ்வாறே பிறவும் வந்துள்ளது. |
| 10 | புலவர்க்குழு – தவறு<br>புலவர் குழு – திருத்தம்<br>கவிஞர்ச் சிறப்பு – தவறு<br>கவிஞர் சிறப்பு – திருத்தம் | புலவரது குழு என்பதே புலவர்குழு எனத் தொகையாக வந்துள்ளது. இதில் 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. இது ஆறாம் வேற்றுமைத் தொகையாகும். ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலை மொழி உயர்திணையில் வல்லினம் மிகாது எனும் விதிப்படி இதில் வல்லினம் மிகவில்லை. இவ்வாறே பிறவும் வந்துள்ளது |
| 11 | கழுகுச் சிறியது – தவறு<br>கழுகு சிறியது – திருத்தம்<br>செய்துக்கொடு – தவறு<br>செய்து கொடு – திருத்தம் | கழுகு என்பது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். செய்து என்பது இடைத்தொடர்க் குற்றியலுகரம். இவ்விரு குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகாது எனும் விதிப்படி, இவற்றின் பின் வல்லினம் மிகவில்லை. |

## 4.6 தொகுப்புரை

### தொகுப்புரை

இக்கால இலக்கண மரபும் தொடரமைப்பும் எனும் இவ்வலகில், இக்கால இலக்கணத்தின் பயன்பாடு பற்றியும் தேவை பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. தொடர் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளது.

படிநிலை இலக்கணங்கள் தோன்றினால் தான் இலக்கண அறிவும் இலக்கண ஆராய்ச்சியும் வளரமுடியும். அத்தகைய வளர்ச்சிக்கு உதவும் வகையில், தொடக்கநிலை மாணவர்களுக்கென்றும், உயர்நிலை மாணவர்களுக்கென்றும், மேல்நிலை மாணவர்களுக்கென்றும் தனி இலக்கணம் அமைதல் வேண்டும். இவை மட்டுமல்லாமல், எல்லாருக்கும் பயன்படத்தக்க வகையில், சொற்பொருள் விளங்காதபோது, அகராதியைப் பயன்படுத்துவது போல, மொழியில் நமக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கிக்கொள்ளத் தக்க வகையில் நோக்குநிலை இலக்கணம் தமிழில் தோன்ற வேண்டும். யார்க்கு ஐயம் ஏற்பட்டாலும் அவர்கள் ஐயத்தைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் அகர வரிசையில் செய்திகளை வழங்குகின்ற ஒரு நோக்குநிலை இலக்கணமும் தமிழுக்குத் தேவை.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
|---|
| 1. தமிழில் எழுதும்போது எவ்விதமான பிழைகள் ஏற்படுகின்றன? |
| 2. வல்லினம் மிகும் இடம் குறிப்பு தருக. |
| 3. வல்லினம் மிகா இடம் குறிப்பு தருக. |
| 4. வாக்கியம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக. |
| 5. வாக்கியத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்? |
| 6. கருத்துவகை வாக்கியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? |
| 7. அமைப்பு வாக்கியத்தின் வகைகள் யாவை? |